சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.78/2015

ம.சா.2

நாள். 27.06.2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெயசூரியா | மதம்: | இந்து |
| தகப்பனார்/கணவர் பெயர்: | தங்கவேல் | ஜாதி: | --- |
| கிராமம்: | மொத்தையனூர் | வேலை: | --- |
| வட்டம்: | சங்ககிரி. | வயது: | --- |

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரரை எனக்கு விபத்திற்கு முன்பு தெரியாது. மனுதாரரை எப்படி தெரியும் என்றால் நான் பட்டறை வேலைக்கு சென்ற போது அவரும் அங்கு வேலை செய்ததால் அவரை எனக்கு தெரியும். அதனால் கடந்த 3 வருடங்களாக மனுதாரர் எனக்கு பழக்கம். அதற்கு முன்பு எனக்கு அவரை அறிமுகம் இல்லை. விபத்து நடந்து 10 வருடங்கள் இருக்கும். விபத்து சமயத்தில் நான் சிலிண்டர் டெலிவரி ஆட்டோவில் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். விபத்தின் போது எனக்கு வயது 15 அல்லது 16 இருக்கும். நான் அப்போது 7 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். நான் டிப்ளமோ மெக்கானிக்கல் படித்துள்ளேன். நான் கேஸ் ஏஜென்சியில் வேலை செய்ததற்கான ஆதாரம் இல்லை. விபத்தின் போது நாங்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆட்டோவில் சென்றோம். சுமார் 200 மீ தூரத்திற்கு முன்பு விபத்து நடந்தது. விபத்தின் போது மனுதாரர் வாகனம் இடது

ஓரமாக சென்று கொண்டிருந்தது. அப்போது லாரி முன்னால் சென்ற மனுதாரரின் வாகனத்தை முந்த முயன்ற போது எதிரில் பேருந்து வந்தால் லாரியின் ஓட்டுநர் லாரியை இடது ஓரமாக திருப்பியதால் விபத்து நடந்தது. லாரியின் முன் பக்கத்தில் இருசக்கர வாகனம் மோதியது. விபத்து நடந்த இடத்தில் எங்களை தவிர வேறு நபர்கள் 4, 5 பேர்கள் இருந்தார்கள். விபத்து சம்பந்தமாக போலீஸ் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடத்தில் நான் இருந்த போது போலீசார் அங்கு வரவில்லை. இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர்கள் சென்றார்கள், அதில் மனுதாரரை மட்டும் தான் எனக்கு அடையாளம் தெரியும். இருசக்கர வாகனம் லாரியின் வலதுபுற பின் பக்கத்தில் மோதியது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் முன் பகுதி முழுவதும் சேதாரமாகியிருந்தது என்றால் சரிதான். அதேபோல் லாரியின் வலது பின்பக்க இன்டிகேட்டரும் சேதாமாகியிருந்தது என்றால் நான் பார்க்கவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்காமல் பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தான் முன்னால் சென்ற லாரியை முந்த முயன்ற போது கவனகுறைவாக லாரியின் வலது பின் பக்கத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுகொண்டதற்காக அருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-ஜெயசூரியா

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.